முருகப்பெருமான் துணை

**மகான் சச்சிதானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.02.2024, வியாழக்கிழமை

1. எங்கு காணினும் தருமமப்பா
எல்லாம் அரங்கன் சேவையப்பா
சங்கு முழங்கிட ஓங்கார குடிலில்
சண்முகனார் வெளிப்பாடு உறுதியப்பா
2. அப்பனே அரங்கமகா ஞானி
ஆற்றல்பட இயக்கி வர
ஒப்புகொண்டு கலியுகமக்கள்
ஓங்காரக் குடிலில் தொடர்பு கூட்டிவர
3. வருகவே வையகம் மாறுமென
வாழ்த்தியே துல்லிய ஆசி
கருதியே சோபகிருது கலைதிங்கள்
கண்டுரைக்க மூவாறு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 18 ம் நாள், 01.02.2024, வியாழக்கிழமை)
4. வாரமதில் சச்சிதானந்தரும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமிலா ஞானப் படைகளும்
சுத்தநெறி வழி ஞானிகளும்
5. ஞானிகளும் கலியில் அரங்கனால்
நாலா திக்கிலுமே உருவாகி
ஞானிகள் பூசையும் பெருகிவர
ஞாலமதில் நம்பகமில்லா அஞ்ஞான
6. அஞ்ஞான மாந்தர்களெல்லாம்
ஆபத்து கண்டு தெளிவுற்று
மெய்ஞான வாழ்வை சிக்கென
மேலவர் துணைபட பற்ற நேரும்
7. நேருமை கொண்ட சமூகமாக
நிலவுலகம் புதுவடிவம் கண்டு
வறுமை போக்கும் வண்ணம்
வளம் சேர்க்கும் தலைமையை

8. தலைமையை உருவாக்கி நன்கு
தரணிக்கு பாதுகாப்புக் கூடும்
சலனமற சாமானியரும் வாழ
சகல நலத் திட்டங்கள் வடிவாக

9. ஆகவே மக்களை நேசிக்கின்ற
ஆபத்துவாரா பாதுகாக்கின்ற
மிகையான ஞான ஆட்சியாக
முருகப்பெருமான் ஆசிகொண்ட

10. ஆசிகொண்ட ஞான உலகாக
அகிலம் தேறியே மாற்றம்
பேசிட ஞானயுகம் ஆகவும்
புதுமை கண்டு மாறும்

11. மாறவே ஞானிகளின் ஆட்சி
மகான் அரங்கனால் அமைய
கூறவே நல்லுலகம் ஆகும்
கூறியே துல்லிய ஆசி முற்றே

—சுபம்—